சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

ம.சா. 01 திரு. சலீம் த /பெ திரு. மொய்தீன் , வயது . 50

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை .–**

01. புகார்தாரர் என் நண்பர் என்றால் சரிதான். 2011 ஆம் ஆண்டில் இருந்து எதிரியின் நண்பர் என்ற முறையில் பலமுறை பொருள் உதவி செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் திருப்பத்தூரில் மாலிக் ஹார்டுவேர்ஸ் என்ற பெயரில் கடை வைத்துள்ளேன் என்றாலும் ஜோலார்பேட்டையில் ஸ்டார் ஹார்டுவேர் சென்ற பெயரில் கடை வைத்துள்ளேன் என்றாலும் சரிதான். நான் ஆந்திராவில் எம்.எஸ் ஹார்டுவேர் என்ற பெயரில் கடை வைத்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எ.சா.ஆ. 01 ஆவணமானது சட்டத்தின் கீழ் ஏற்கத்தக்க ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் எ.சா.ஆ. 02ஆவணமானது கணக்கு முடிக்கப்பட்டுள்ள ஆவணம் என்றால் புகார்தாரர் என்னிடம் வாங்கியதற்கான ரசீது ஆகும். எ.சா.ஆ. 02 ஆவணமானது 2016 –2017 ஆண்டுகளுக்கான கணக்கு வழக்குகளின் துண்டு சீட்டு என்றால் புகார் கையொப்பமிட்டு வாங்கிய ஆவணம் தான். என்னிடம் காட்டப்படும் எ.சா.ஆ. 02 ஆவணத்தில் போச்சம்பள்ளி குமார் என்றும், நாட்றம்பள்ளி முருகன் என்றும், சுரேஷ் கார்பெண்டர் என்றும், சான் பாஷா என்றும், முருகன் நாற்றம்பள்ளி என்றும், சலீம் மாமா என்றும், நாட்றம்பள்ளி முருகன் என்றும், சங்கர் ஸ்டோர் என்றும், குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எ.சா.ஆ. 03 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள கணக்குகள் பிளைவுட்டிற்கு உண்டான கணக்குகள் என்றால் சரிதான். அந்த ஆவணம் 2020 உண்டான துண்டுசீட்டு என்றால் சரியல்ல. புகார்தாரர் கைப்பட எழுதிய ஆவணம் ஆகும். நான் GST கட்டி தான் தொழில் செய்துவருகிறேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எந்த ஆவணத்திலும் என் கடையின் பெயரில் ஆவணங்கள் தயார் செய்யப்படவில்லை என்றாலும், வெறும் துண்டுசீட்டில் தான் உள்ளது என்றாலும், எனவே அந்த ஆவணங்களை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எந்த ஆவணங்களிலும், மாலீக் ஆர்டுவர் என்ற பெயரில் முத்திரையோ சின்னமோ இல்லை என்றால் அனைத்து ஆவணங்களிலும் புகார்தாரர் தான் தயார் செய்தார். என் கடைக்கு பில் புத்தகம் உள்ளது. அந்த பில் புத்தகத்தில் GST எண் குறிபிட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அனைத்து

ஆவணங்களும் மாலீக் ஆர்டுவர் என்ற பெயரில் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நான்காவது ஆவணம் சட்டப்படி இயக்கத்தக்கது அல்ல என்றாலும் சரி அல்ல. அந்த ஆவணத்தில் தேதி அல்லது கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. நான் புகார்தாரரிடம் பெற்ற பணத்தை அவருக்கு திருப்பி கொடுக்காமல் இருக்க வேண்டி நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்க வேண்டி பொய்யாக இந்த ஆவணங்களை தாக்க செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சட்ட அறிவிப்பு பெற்றதும் பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் இல்லை. அந்த சமயம் நான் வெளியூரில் இருந்தேன்.அதன் பின்பு என் வழக்கறிஞரிடம் பதில் அறிவிப்பு அனுப்ப வேண்டும் என்று கூறினேன் என்றால் கூறினேன். அதன் பின்பு பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் எனக்கு தெரியாது. என் வழக்கறிஞர் தான் கேட்க வேண்டும். நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் புகார்தாரரை ஏமாற்ற வேண்டி தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல.

KODHAVADI SUBRAMANIAN DINESH
Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH

Witness sign

Judicial Magistrate No.01
Thirupattur